**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM**

**O.S.No.187/2017**

Deposition of :PW-2

| | | |
|---|---|---|
| Name | : திரு.அசோக்குமார். | Caste: |
| Father's Name | : திரு.மாதைய்யன் | Calling: |
| Husband's Name: | | |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Thiru.N.P. Soundararajan, Assistant of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 7th day of February -2024.

**07.02.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் சொர்ணபுரிகிளை இந்தியன் வங்கியில் கடன்பிரிவு மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆரம்பத்தில் அலகாபாத் வங்கியில் பணிபுரிந்தேன். அலகாபாத் வங்கியானது இந்தியன் வங்கியுடன் இணைக்கப்பட்டுவிட்டது. எனவே தற்போது இந்தியன் வங்கி ஊழியராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக உரிய கோப்புகளுடன் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க வேண்டுமென்று நீதிமன்ற அழைப்பாணையானது பெறப்பட்டதன் அடிப்படையில் சாட்சியாக ஆஜராகியிருக்கிறேன். உரிய ஆவணங்களை கொ்ண்டுவந்திருக்கிறேன்.

இவ்வழக்கின் வாதியான வெங்கடாசலபதி என்பவர் கடந்த 11.02.2013 அன்று அலகாபாத்வங்கிக்கு ஆதரவாக ஆவணஒப்படைப்பு அடமான பத்திரத்தினை நிறைவேற்றி கொடுத்திருக்கிறார். அந்த ஆவணமானது சார்பதிவாளர் அலுவலகத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணம் வா.சா.ஆ.2 என்றால் சரிதான்.

அந்த அடமான கடன் சம்மந்தப்பட்ட லோன்எண்.50144253503 ஆகும். அந்த கடனானது M/s.7/24 Enterprises என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. கடன் தொகை ரூ.20,00,000/– அந்த கடன் வேண்டி கொடுக்கப்பட்ட கடன் விண்ணப்பத்தின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது X.1 வரிசை. அந்த கடன் வழங்குவதற்காக அலகாபாத் வங்கியால் கொடுக்கப்பட்ட சாங்சன்உத்தரவின் உண்மை நகல் X.2.

அந்த கடனானது செலுத்தி முடிக்கப்பட்டுவிட்டது. அது சம்மந்தப்பட்ட கணக்கு பட்டியல் X.3 வரிசை ( கணக்கு பட்டியல் முழுமையாக இல்லை. 3 பக்கங்கள் மட்டுமே இருக்கிறது ). மேற்படி அடமான கடனுக்காக வாதி ஜாமீன்தாரராக இருக்கிறார். மேற்படி கடனுக்காக வங்கியில் ஒப்படைக்கப்பட்ட அசல் ஆவணங்களை தங்களிடம் வழங்ககோரி 15.07.2014 அன்று ஒரு கடிதமானது M/s.7/24 Enterprises நிறுவனத்தால் அலகாபாத் வங்கியில் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த கடிதத்தின் உண்மை நகல் X.4.

கடந்த 09.03.2015 அன்று மற்றொன்று கடிதமானது M/s.7/24 Enterprises நிறுவனத்தால் அலகாபாத் வங்கியில் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த கடிதத்தில் கடனுக்காக கொடுக்கப்பட்ட அசல் ஆவணங்களை வெங்கடாசலபதி என்பவரிடம் கொடுக்கவேண்டாம் என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த கடிதத்தின் உண்மை நகல் X.5.

மேற்படி கடனுக்காக ஒப்படைக்கப்பட்ட அசல் ஆவணங்கள் இன்னும் எங்கள் வங்கி வசம்தான் இருக்கிறது. மேற்படி அடமான கடன் சம்மந்தப்பட்ட Terms and conditions அடங்கி ஒப்பந்த பத்திரத்தின் உண்மை நகல் X.6. அந்த நிபந்தனைகளை தாங்கள் ஒப்புகொள்வதாக 2 மற்றும் 3 பிரதிவாதிகள் கையொப்பம் செய்து கொடுத்துள்ள ஒப்புகையின் உண்மை நகல் X.7.

மேற்படி கடனுக்காக ஒப்படைக்கப்பட்ட வாதிக்கு சொந்தமான சொத்து சம்மந்தப்பட்ட அசல் ஆவணமும் எங்கள் வங்கி வசம் தான் இருக்கிறது. ரிசர்வ் வங்கி விதிகளின் படி ஒரு கடனானது கட்டி முடிக்கப்பட்டுவிட்டால் அசல் பத்திரங்களை உரிமையாளர்களிடம் வங்கியானது ஒப்படைத்துவிடவேண்டும் என்றால் கடன் வாங்கியவரும், சொத்தின் உரிமையாளரும் கையொப்பம் செய்தால் ஆவணங்களை திரும்ப கொடுத்துவிடுவோம்.

(மேற்கண்ட அனைத்து ஆவணங்களும் பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. )

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் கடந்த 2022 ஆம் ஆண்டு ஜீலை மாதத்தில் தான் தற்போது பணிபுரியும் கிளையில் பணியில் சேர்ந்திருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே பணபரிவர்த்தனை தொடர்பாக நடக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன்.

X.1 முதல் X.7 வரையிலான ஆவணங்களில் வங்கியின் கிளை மேலாளரோ அல்லது கணக்காளரோ உண்மை நகல் என்று கையொப்பம் செய்து கொடுக்காத காரணத்தினால் அந்த ஆவணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளகூடிய ஆவணங்கள் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி அடமான கடன் சம்மந்தமாக வாதி நீங்கலாக இன்னும் சில ஜாமீன்தாரர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். எனவே எனது சாட்சியமானது வாதியின் வழக்கிற்கு எந்த வகையிலும் உதவிபுரியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

மேற்படி அடமான கடனுக்காக வெங்கடாசலபதி, ஜெயபாலாஜி, சதீஷ், கலைமணி, கோகிலா ஆகிய ஐந்துபேரும் ஜாமீன்தாரராக கருப்படுவார்கள். X2 ஆவணத்தில் மேற்படி சதீஷ் மற்றும் ஜெயபாலாஜி ஆகியோர்கள் சாட்சிகளா கையொப்பம் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி நிறுவனத்தின் ஒரு பங்குதாரரான 3 ஆம் பிரதிவாதியின் மகன்தான் சதீஷ் என்றால் சரிதான். இரண்டாம் பிரதிவாதியின் கணவர் தான் ஜெயபாலாஜி என்றால் சரிதான்.

**<u>மறுகுறுக்குவிசாரணை</u>**

X.1 ஆவணமானது சட்டப்படி செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.